[1994 ஏப்ரல் 29

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 460, திரு. ஏ. கே. சி. சுந்தரவேல், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

460—

மலைவாழ் மக்கள் தேனீ வளர்க்க கதர் கிராமத் தொழில் வாரியம் ஏற்பாடு செய்தல்.

***22668*—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஏலகிரி மலை, ஜவ்வாது மலை மலைவாழ் மக்கள் தேனீ வளர்க்க கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் ஏற்பாடு செய்ய அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி, கதர்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1976 ஆம் ஆண்டு முதல் ஏலகிரி, ஜவ்வாது மலைப் பகுதியில் வாழும் மலைவாழ் மக்களுக்குத் தேனீ வளர்ப்புக்குத் தேவையான உபகரணங்கள், மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மானியமாக வழங்கப்பட்டு அன்று முதல் இன்று வரை இந்தத் தேனீ வளர்ப்புத் தொழில் மிக இலாபகரமாகச் செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏலகிரி மலை, ஜவ்வாது மலை ஆகியவற்றில் சுமார் 25000 மக்கள் வசிக்கிறார்கள். அவர்களுக்குத் தெரிந்த ஒரே தலைவி நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்தான். நமது இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் மீது அவர்கள் அன்பையும் பாசத்தையும் வைத்திருக்கிறார்கள். அங்கே விவசாயம் தவிர வேறு எந்தத் தொழிலும் இல்லை. மலைவாழ் மக்களுக்குத் தேனீ வளர்ப்பதற்குக் கடன் கொடுத்திருப்பது குறித்து அமைச்சருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது தேனீக்களுக்கு ஒரு வகையான நச்சு நோய் பரவி வருகிறது. அது ஜவ்வாது மலை, ஏலகிரி மலை ஆகிய பகுதிகளிலும் பரவ ஆரம்பித்துள்ளது. இதைத் தடுக்க வாரியம் ஏதாவது நடவடிக்கை எடுத்துள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைத்தான் நான் நேற்று எனது பதிலுரையில் மிக விளக்கமாகக் கூறினேன். தேனீக்களுக்கு வரக்கூடிய இந்த நச்சு நோயைக்

1994 ஏப்ரல் 29]

கட்டுப்படுத்துவதற்காக தேனீ வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய அந்த மலைவாழ் மக்களுக்கு தனியான முறையில் பயிற்சி அளிக்கப்படுகிறது. அந்தப் பயிற்சி வகுப்புக்கு நானே நேரடியாகச் சென்று அந்த மக்கள் மத்தியிலே அமர்ந்து அவர்களுக்குத் தேவையான பயிற்சிகளை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் சரியாகக் கொடுக்கிறார்களா என்பதைக் கவனித்து வருகிறேன். இதுபோன்ற பல்வேறு திட்டங்களை மலைவாழ் மக்களுக்கு எடுத்துக்கூறி வருகிறோம். நச்சு நோயை அழிக்க வாரியம் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை நான் கூறிக்கொள்கிறேன்.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனீ வளர்ப்புத் திட்டத்தின் கீழ் தற்போது எத்தனைபேர் பயனடைந்து வருகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஜவ்வாது, ஏலகிரி மலைப் பகுதிகளில் முழுநேரத் தொழிலாக 2000-க்கும் மேற்பட்ட மக்கள் பயனடைந்து வருகிறார்கள். பகுதி நேரத் தொழிலாக சுமார் 8500-க்கு மேற்பட்ட மக்கள் இந்தத் தொழிலை நம்பி இருக்கிறார்கள். ஆகவே கிட்டதட்ட அந்த ஏலகிரி, ஜவ்வாது மலைப்பகுதியில் 11 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மலைவாழ் மக்கள் இந்தத் தேனீ வளர்ப்புத் தொழிலை நடத்தி அவர்கள் வாழ்க்கையில் சமுதாய மேம்பாடு அடைய வழிகாட்டுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தள்ளிவைக்கப்பட்ட மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுடைய கேள்விகள் இப்போது எடுத்துக் கொள்ளப்படுகின்றன. வினா எண் 452, திரு. கு. சீனிவாசன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

452—

செங்கல்பட்டு—எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் ஆற்று மணல் எடுப்பதைத் தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

*** 10275—திரு. கு. சீனிவாசன் :**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம், திருவள்ளூர் தாலுகா அரண்வாயில் பகுதியில் (கூவத்தில்) மற்றும் ஸ்ரீபெரும்புதூர் தாலுகா,

LEGISLATIVE ASSEMBLY — TRUTH ALONE TRIUMPHS